2018 ஒன்ராறியோத் தேர்தல் கையேடு

**நாங்கள் வாக்களிப்பதைச் சுலபமாக்குகின்றோம்.**

யார், எப்போது, எங்கே மற்றும் எப்படி வாக்களிப்பது

Elections Ontario

**ஜூன் 7, 2018 அன்று**, ஒன்ராறியோவின் 42வது பொதுத் தேர்தல் **நடைபெறவுள்ளது.**

ஒன்ராறியோவில் யார், எப்போது, எங்கே மற்றும் எப்படி வாக்களிப்பது என்பது பற்றிய முக்கியமான தகவல்களை இந்த வழிகாட்டி உள்ளடக்குகிறது.

| | |
|---|---|
| **மே 9** | தேர்தல் பற்றிய சட்டரீதியான அறிவிப்பு (Writs) வழங்கப்படல் மற்றும் வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்தல் ஆரம்பம் |
| **மே 10** | விசேடமான வாக்குப்பதிவுக்கு விண்ணப்பிப்பதற்கான முதல் நாள் |
| **மே 17** | வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்தல் முடிவு 2 P.M.(ET) |
| **மே 26 – ஜூன் 6** | உங்களுடைய தேர்தல் அலுவலகத்தில் (returning office) வாக்களிப்புக்கான அணுகை (Accessible voting) |
| **மே 26 – மே 30** | முன்கூட்டிய வாக்களிப்பு 10 A.M.– 8 P.M. (ET) |
| **மே 29** | இணையத்தில்பதிதலைப் (e-Registration) பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் இணைவதற்கான இறுதிநாள் |
| **ஜூன் 7** | **தேர்தல் நாள்** 9 A.M.– 9 P.M. (ET) |

**யார் வாக்களிப்பது?**

பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், இந்த 2018 பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு உங்களுக்குத் தகுதியுண்டு, நீங்கள்:

- தேர்தல் நாளான **ஜூன் 7, 2018** அன்று, 18 வயதுக்குக் குறையாதவராக இருக்கிறீர்கள்
- ஒரு கனேடியப் பிரஜை, மற்றும்

- ஒன்ராறியோவில் வசிக்கும் ஒருவர்

**யாருக்கு நான் வாக்களிக்கிறேன்?**

ஒன்ராறியோச் சட்டசபையின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களில் (MPP) ஒருவராக இருந்து உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக, உங்களுடைய தேர்தல் மாவட்டத்தில் பதிவுசெய்த வேட்பாளர் ஒருவருக்கு நீங்கள் வாக்களிக்கிறீர்கள். மாகாணத்திலுள்ள தேர்தல் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒருவர் என்றரீதியில் 124 MPPகள் உள்ளனர்.

வழமையில், தெரிவுசெய்யப்பட்ட MPPகளில் அதிகமானவர்களைக் கொண்டிருக்கும் அரசியல் கட்சியே மாகாண அரசாங்கத்தை உருவாக்கிறது.

உங்களுடைய வாக்குச்சீட்டை நிராகரிக்கும் உரிமையை ஒன்ராறியோச் சட்டம் உங்களுக்கு வழங்குகிறது. நிராகரிக்கப்பட்ட வாக்குகளும் அதிகாரபூர்வமான கணக்கெடுப்பில் சேர்க்கப்படுகின்றன.

**புதிய விடயமென்ன?**

நீங்கள் 16 அல்லது 17 வயதுடையவராக இருந்தால், **elections.on.caஇல்**, எதிர்கால வாக்காளர்களுக்கான ஒன்ராறியோப் பதிவேட்டில் உங்களைத் தற்போது நீங்கள் சேர்த்துக்கொள்ள முடியும்.

சேர்க்கப்பட்டால், உங்களுக்கு 18 வயதாகும்போது உங்களுடைய தகவல்கள் தானாகவே வாக்காளர் பட்டியலுக்கு இடமாற்றப்படும்.

இந்தப் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு, ஜூன் 7, 2018 இல் உங்களுக்குக் குறைந்தது 18 வயதிருக்க வேண்டும்.

**வாக்காளர் சரிபார்ப்புப் பட்டியல்**

- வாக்களிப்பதற்காக **elections.on.caஇல் நீங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்**
- தபாலில் உங்களுடைய வாக்காளர் தகவல் அட்டையைப் (VIC) பெற்றுக்கொள்ளுங்கள்.
- பொருத்தமான ID உங்களிடம் இருப்பதைச் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.
- உங்களுடைய உரிமைகள், பிரச்சினைகள் மற்றும் வேட்பாளர்களைப் பற்றி அறியுங்கள்.

- எப்போது, எங்கே மற்றும் எப்படி வாக்களிப்பது உங்களுக்கு விருப்பம் என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.
- வாக்களிப்பு நிலையத்துக்கு எப்படி நீங்கள் செல்வது என்பதைத் திட்டமிடுங்கள். வாக்களிப்பதற்கு நீங்கள் வரும்போது உங்களுடைய ID மற்றும் VICஐக் கொண்டுவர மறக்காதீர்கள்.

**<வாக்காளர் தகவல் அட்டை>**




**வாக்காளர் பட்டியலில் இருக்கின்றீர்களா?**

வாக்களிப்பதற்கு நீங்கள் வரும்போது, உங்களுடைய வாக்காளர் தகவல் அட்டை (VIC) மற்றும் IDஐக் கொண்டுவாருங்கள்.

**எப்போது நான் வாக்களிப்பது?**

**ஜூன் 7, 2018,** தேர்தல் நாள் ஆகும். வாக்களியுங்கள்: 9 A.M. - 9 P.M. (ET)

பின்வரும் வழிகளிலும் நீங்கள் வாக்களிக்கலாம்:

- உங்களுடைய தேர்தல் அலுவலகத்தில் (returning office), **மே 10 முதல் ஜூன் 6 வரை**, நேரில்
- வாக்களிப்புக்கு உதவும் தொழில்நுட்பத்துடன் உங்களுடைய தேர்தல் அலுவலகத்தில் **மே 26 முதல் ஜூன் 6 வரை**, நேரில்
- **மே 26 முதல் மே 30 வரையான முன்கூட்டிய வாக்களித்தலின்போது**, **நேரில், 10 A.M. முதல் 8 P.M. வரை (ET),** அல்லது
- **மே 10, 2018 முதல் தபால் மூலம்.** தேர்தல் நாளான, **ஜூன் 7, 2018** அன்று**, 6 P.M. (ET)** க்குப் பிந்தாமல் தேர்தல் ஒன்ராறியோவின் தலைமை அலுவலகத்துக்கு அடையாளப்படுத்தப்பட்ட உங்களுடைய வாக்குச்சீட்டுக் கிடைக்கவேண்டும்**.** விண்ணப்பப்படிவமொன்றை பின்வரும் வழிகளில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்:
  **elections.on.ca**
  **sb@elections.on.ca**
  **your returning office (உங்களுடைய தேர்தல் அலுவலகம்)**
  **1-855-523-5932** (கட்டணமற்றது)
  **1-416-649-1046** (நாங்கள் கட்டணம் கட்டுவது (collect))
  **1-888-292-2312** (செவிப்புலனர்றோருக்கானது - கட்டணமற்றது)

**நினைவில்வைத்திருங்கள்**
உங்களுடைய வாக்குச்சீட்டை விரைவாகப் பெறுவதற்காக, உங்களுடைய வாக்காளர் தகவல் அட்டை (VIC) மற்றும் IDஐக் கொண்டுவாருங்கள்.

**எங்கே நான் வாங்களிப்பது?**
வாக்களிப்பதற்காக **மே 29, 2018** அளவில் நீங்கள் பதிவுசெய்திருந்தால், தேர்தல் நாளுக்கு முன்பாக வாக்காளர் தகவல் அட்டை ஒன்று (VIC) உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் எப்போது, எங்கே வாக்களிக்கலாம் என்ற தகவல்களை அந்த VIC கொண்டிருக்கும். உங்களுடைய வாக்களிப்பு நிலையத்தை **elections.on.ca** இலும் நீங்கள் கண்டறியலாம்

**மாணவர்கள் வாக்களித்தல்**
பாடசாலைக்காக நீங்கள் வெளியிலிருந்தால், நீங்கள் நிரந்தரமாக வசிக்கும் தேர்தல் மாவட்டத்தில் அல்லது பாடசாலைக்காக நீங்கள் தற்காலிகமாக வசிக்கின்ற தேர்தல் மாவட்டத்தில் வாக்களிப்பதை நீங்கள் தெரிவு செய்ய முடியும். வாக்களிப்பதற்கு

உங்களுடைய பெயரையும் வசிப்பிட முகவரியையும் காட்டும் ID உங்களிடம் இருக்க வேண்டும்.

**மருத்துவமனையில்**
பராமரிப்பைப் பெறுவதற்காக பங்குகொள்ளும் மருத்துவமனை ஒன்றில் நீங்கள் தங்கியிருந்தால், **மே 21 முதல் மே 23 வரை** உங்களால் வாக்களிக்கக்கூடியதாக இருக்கலாம். உங்களுடைய தேர்தல் அலுவலகத்துடன் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

**புதிய விடயமென்ன?**
2018 பொதுத் தேர்தலுக்கான ஒன்ராறியோவின் தேர்தல் மாவட்டங்கள் 124 ஆக அதிகரித்திருக்கின்றன.

தற்போது புதியதொரு தேர்தல் மாவட்டத்தில் நீங்கள் வாக்களிக்கக்கூடும் என்பது இதன் கருத்தாகும்.

உங்களுடைய வாக்களிப்பு நிலையங்களை **elections.on.caஇல் கண்டறியுங்கள்**.

**வாக்களிப்பதற்கு நான் பதிவுசெய்வது எப்படி?**
வாக்காளர் தகவல் அட்டை (VIC) ஒன்று உங்களுக்குக் கிடைக்காவிட்டால், வாக்காளர் பட்டியலில் நீங்கள் இல்லாதிருக்கலாம்.

VIC ஒன்றைப் பெறுவதற்கு, **elections.on.ca**இல் உள்ள வாக்காளர் பட்டியலில், **மே 29, 2018** அளவில் உங்களுடைய பெயரையும் சேர்த்துக்கொள்ளுங்கள். முன்கூட்டிய வாக்குப்பதிவின்போது அல்லது தேர்தல் நாளன்றுகூட உங்களுடைய தேர்தல் அலுவலகத்தில் உங்களுடை தகவல்களை நீங்கள் இற்றைப்படுத்திக்கொள்ளலாம்.

உங்களுடைய பெயரையும் வசிப்பிட முகவரியையும் காட்டும் ID ஒன்று, வாக்காளர் பட்டியலில் உங்களுடைய பெயரைச் சேர்ப்பதற்கு உங்களுக்குத் தேவையாகவிருக்கும்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய ID பட்டியல் ஒன்றை elections.on.caஇல் கண்டறியுங்கள்.

**புதிய விடயமென்ன?**

வாக்காளர் பட்டியலில் உங்களுடைய தகவல்களை நீங்கள் உறுதிப்படுத்துவதை, இற்றைப்படுத்துவதை அல்லது சேர்ப்பதை, எங்களுடைய இணையத்திலுள்ள புதிய இணையத்தில்பதியும் கருவி (e-Registration tool) உங்களுக்குச் சௌகரியமானதாக்குகிறது.

தேர்தல் நாளன்று வாக்களிப்பதைச் சுலபமாக்குவதற்கு, **மே 29, 2018** அளவில் **elections.on.ca**க்கு வருகைதாருங்கள்.

**வாக்களிப்பதற்கு எனக்கு உதவி தேவைப்பட்டால் என்ன செய்வது?**

உங்களுடைய வாக்களிப்பு நிலையத்தின் அணுகல் வசதிகள் பற்றி **elections.on.ca**இல் மேலும் அறியுங்கள்.

சேவைக்கான விலங்குகள் அனுமதிக்கப்படுகின்றன.

நீங்கள் வாக்களிப்பதற்கு உதவிசெய்வதற்காக குடும்ப உறுப்பினர், நண்பர் அல்லது ஆதரவாளர் ஒருவரை நீங்கள் அழைத்து வரலாம் அல்லது வாக்களிப்பு நிலையப் பணியாளர் ஒருவரிடம் நீங்கள் உதவி கேட்கலாம். உதவி தேவைப்படுகிறது என்றும், உங்களுடைய வாக்கு இரகசியமாக வைக்கப்படும் என்றும் உறுதிகூறும்படி நீங்கள் இருவரும் கேட்கப்படுவீர்கள்.

பின்வரும் கருவிகள் மற்றும் சேவைகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்:

- 30க்கும் மேற்பட்ட மொழிகளில் வாக்களிப்புப் பற்றிய அறிவுறுத்தல்கள்,
- உருப்பெருக்கப்பட்ட தாள்கள்,
- உங்களுடைய வாக்குப்பதிவுக்காக பிரெயில் மாதிரி (Braille template),
- உங்களுடைய உள்ளூர் தேர்தல் அலுவலகத்தில் **மே 26 முதல் ஜூன் 6** வரை வாக்களிப்பதற்கு உதவும் தொழில்நுட்பம் அல்லது
- பதிவுசெய்த சைகை மொழி மொழிபெயர்ப்பாளருக்கு அல்லது உதவியாளருக்குக் (intervenor) கட்டிய கட்டணத்துக்கான ஈடு.

நடமாட்டத்தைப் பாதிக்கும் வலுவிழப்பு ஒன்று உங்களுக்கு இருந்தால், உங்களுடைய தேர்தல் அலுவலகத்தைத் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள்.

**புதிய விடயமென்ன?**
உதவிக்கான கருவியாக உங்களுடைய கைத் தொலைபேசியை நீங்கள் தற்போது பயன்படுத்த முடியும்.

இருப்பினும், பூர்த்திசெய்ய வாக்குச்சீட்டுக்களை நீங்கள் படமெடுப்பதற்கோ அல்லது பகிர்ந்துகொள்வதற்கோ அதைப் பயன்படுத்த முடியாமலிருக்கலாம்.

எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்:
வலைத்தளம் **elections.on.ca**
தொலைபேசி **1-888-668-8683**
செவிப்புலனற்றோர் **1-888-292-2312**
மின்னஞ்சல் info@elections.on.ca

Twitter **@ElectionsON**
Facebook **ElectionsON**
Instagram **@electionson**
YouTube **ElectionsOn**

இந்தக் கையேட்டில் உள்ள தகவல்களை அணுகக்கூடிய வடிவங்களில் பெற்றுக்கொள்வதற்குத் தயவுசெய்து elections.on.caஐப் பார்வையிடுங்கள் அல்லது 1-888-668-8683ஐ அல்லது1-888-292-2312ஐ (செவிப்புலனற்றோர்) அழையுங்கள்.

**தேர்தல் காலத்தின்போது நான் எப்படி வேலைசெய்யலாம்?**
தேர்தலை நடத்துவதற்கு எங்களுக்கு உதவிசெய்வதற்காக வாக்களிப்பு நிலையத்துக்கான பணியாளர்களைத் தேர்தல் ஒன்ராறியோ தேடுகிறது. அனேகமான பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு நீங்கள் குறைந்தது 18 வயதுடையவராக இருக்கவேண்டும், சில பதவிகள் 16 வயதுள்ளவர்களுக்கு உரியவையாகவும் இருக்கின்றன. விபரங்களுக்கு **elections.on.ca**ஐப் பார்வையிடுங்கள்.